ஏழ்மையும் அறியாமையும் கனவுகளை
அழித்துவிட அனுமதியோம்...

முற்றிலும் சேவை நோக்குடன் செயல்பட்டு வரும்

# பொதுத்தமிழ்

## 11 மற்றும் 12ம் வகுப்பு

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில்

உருவாக்கப்பட்டது.

TNPSC GROUP - II, IIA, IV, VII, VIII, VAO,
TET PAPER - I, II, TNUSRB

ஆகிய அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும் பயன்படுத்தும்
வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

எதைப் படிக்க வேண்டும் என்பதை விட
எதைப் படிக்கக் கூடாது என்பதில் தெளிவு வேண்டும்.

## திண்ணை
### பயிற்சிப் பட்டறை, தேனி

9940970325 Thinnai Theni Thinnai Competitive Exam thinnnaimail@gmail.com
Thinnai Study Circle 9361482208

*ஏழ்மையும் அறியாமையும் கனவுகளை அழித்துவிட அனுமதியோம்*

# திண்ணை

## பயிற்சிப் பட்டறை, தேனி

வழங்கும்

# பொதுத்தமிழ்



11 மற்றும் 12-ம் வகுப்பு வரை புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது

**பதிப்பகம்**

**திண்ணை பதிப்பகம்,**

**57ஏ, ஜவஹர் மெயின்ரோடு, NRT நகர், தேனி – 625531**

**Contact: 93614 82208**

**9940970325** **Thinnai Competitive Exam** **Thinnai Theni**

# நூலைப்பற்றி

- "எதைப் படிக்க வேண்டும் என்பதை விட எதைப் படிக்கக் கூடாது என்பதில் கூடுதல் தெளிவு வேண்டும்". உறுதியாகப் படிக்க வேண்டிய பாடக்குறிப்புகளின் தொகுப்பே இந்நூல்.
- மாற்றியமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.
- செய்யுள், உரைநடை, விரிவானம், இலக்கணம் - வகுப்பு வாரியாக தனித்தனியே தொகுத்து இந்நூலில் வழங்கப்பட்டு உள்ளது.
- சொல் பொருள், இலக்கணக்குறிப்பு தேவையான அளவு இடம் பெற்றுள்ளது.
- செய்யுள் பகுதியில் பாடப்புத்தகத்தில் உள்ள அனைத்து பாடல்வரிகளையும் மனனம் செய்வது கடினம். எனவே, கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய பாடல்வரிகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு வகுப்புக்கான பாடக்குறிப்புகள் முடிந்தவுடன் வினாவங்கி தொகுப்பு இடம் பெற்றுள்ளது.
- இறுதியாக மாதிரி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.
- மொத்தத்தில் முதன்மையான தரவுகள் எதுவும் விடுபடாத வகையில் இப்புத்தகம் மிகுந்த கவனத்துடன் பாட வல்லுநர்களால் தயார் செய்யப்பட்டுள்ளது.
- தமிழில் முழுமையான மதிப்பெண்களைப் பெற இந்நூல் உங்களை வழிநடத்தும்.

வாழ்த்துகளுடன்

பெ.அந்தோணிராஜ், எம்.ஏ., எம்.எட்.,

இடம்: தேனி

ஆசிரியர்

# திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!

இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!

உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!

நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!

இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!

இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!

தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!

கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!

சாதி மதம் பேதம் ஒழிப்போம்!

பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!

லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!

லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!

அறத்தின் வழி நின்று மனிதம் போற்று!

# பொருளடக்கம்

## பதினொன்றாம் வகுப்பு


| வ.எண் | பாடத்தலைப்புகள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | உரைநடை | பேச்சுமொழியும் கவிதை மொழியும் | 3 |
| | செய்யுள் | யுகத்தின் பாடல் | 4 |
| | | நன்னூல் பாயிரம் | 5 |
| | துணைப்பாடம் | ஆறாம் திணை | 7 |
| | இலக்கணம் | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 8 |
| 2 | உரைநடை | இயற்கை வேளாண்மை | 12 |
| | செய்யுள் | ஏதிலிக்குருவிகள் | 12 |
| | | திருமலை முருகன் பள்ளு | 13 |
| | | ஐங்குறுநூறு | 15 |
| | துணைப்பாடம் | யானை டாக்டர் | 15 |
| 3 | உரைநடை | மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு | 18 |
| | செய்யுள் | காவடிச்சிந்து | 20 |
| | | குறுந்தொகை | 20 |
| | | புறநானூறு | 21 |
| | துணைப்பாடம் | வாடிவாசல் | 21 |
| | இலக்கணம் | பகுபத உறுப்புகள் | 22 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 25 |
| 4 | செய்யுள் | விஞ்ஞானி | 30 |
| | | நீலகேசி | 30 |
| | | புறநானூறு | 32 |
| 5 | உரைநடை | தமிழகக் கல்வி வரலாறு | 35 |
| | செய்யுள் | பிள்ளைக் கூடம் | 38 |
| | | நற்றிணை | 38 |
| | | தொல்காப்பியம் | 39 |
| | துணைப்பாடம் | இதழாளர்பாரதி | 39 |
| | இலக்கணம் | படைப்பாக்க உத்திகள் | 41 |
| 6 | உரைநடை | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 43 |
| | செய்யுள் | சீறாப்புராணம் | 45 |
| | | அகநானூறு | 45 |
| | | பிம்பம் | 47 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 47 |
| | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 48 |
| 7 | உரைநடை | காலத்தை வென்ற கலை | 53 |
| | செய்யுள் | ஆத்மாநாம் கவிதைகள் | 55 |
| | | குற்றாலக் குறவஞ்சி | 55 |
| | | திருச்சாழல் | 55 |
| | துணைப்பாடம் | இசைத்தமிழர் இருவர் | 56 |
| | இலக்கணம் | கலைச்சொல்லாக்கம் | 59 |
| 8 | உரைநடை | காற்றில் கலந்த பேரோசை | 63 |
| | செய்யுள் | புரட்சிக்கவி | 63 |
| | | பதிற்றுப்பத்து | 64 |
| | துணைப்பாடம் | சிந்தனைப் பட்டிமன்றம் | 65 |
| | இலக்கணம் | ஆக்கப்பெயர்கள் | 65 |
| 9 | உரைநடை | சித்தர் உலகம் | 69 |
| | செய்யுள் | ஜப்பானிய ஹைக்கூ | 70 |
| | | காவியம் | 70 |
| | | தொலைந்து போனவர்கள் | 71 |
| | | வில்லிபாரதம் | 72 |
| | துணைப்பாடம் | காஞ்சனை - முன்னுரை | 74 |
| | இலக்கணம் | நிறுத்தக்குறிகள் | 74 |
| 10 | உரைநடை | தாகூரின் கடிதங்கள் | 79 |

| | | | |
|---|---|---|---|
| | செய்யுள் | ஒவ்வொரு புல்லையும் | 79 |
| | | மனோன்மணீயம் | 80 |
| | துணைப்பாடம் | செவ்வி | 81 |
| **11 ஆம் வகுப்பு மாதிரி வினாத்தாள்** | | | 83 |

| **பனிரெண்டாம் வகுப்பு** | | | |
|---|---|---|---|
| **வ.எண்** | **பாடத்தலைப்புகள்** | | **ப.எண்** |
| 1 | **செய்யுள்** | **இளந்தமிழே!** | **90** |
| | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் - தி.சு.நடராசன் | 90 |
| | செய்யுள் | தண்டியலங்காரம் | 91 |
| | துணைப்பாடம் | பாரதியின் கடிதம் | 92 |
| | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | 93 |
| 2 | **உரைநடை** | **பெருமழைக்காலம்** | **97** |
| | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | 98 |
| | | நெடுநல்வாடை | 98 |
| | துணைப்பாடம் | முதல்கல் | 99 |
| | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | 100 |
| 3 | **உரைநடை** | **தமிழர் குடும்ப முறை** | **103** |
| | செய்யுள் | விருந்தினர் இல்லம் | 105 |
| | | கம்பராமாயணம் | 105 |
| | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | 107 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 110 |
| 4 | **உரைநடை** | **பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்** | **113** |
| | செய்யுள் | இதில் வெற்றி பெற | 116 |
| | | இடையீடு | 116 |
| | | புறநானூறு | 117 |
| | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | 117 |
| | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 118 |
| 5 | **உரைநடை** | **மதராசப்பட்டினம்** | **121** |
| | செய்யுள் | தெய்வமணிமாலை | 124 |
| | | தேவாரம் | 124 |
| | | அகநானூறு | 125 |
| | துணைப்பாடம் | தலைக்குளம் | 126 |
| | இலக்கணம் | படிமம் | 128 |
| 6 | **உரைநடை** | **திரைமொழி** | **131** |
| | செய்யுள் | கவிதைகள் | 133 |
| | | சிலப்பதிகாரம் | 133 |
| | | மெய்ப்பாட்டியல் | 135 |
| | துணைப்பாடம் | நடிகர் திலகம் | 136 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 137 |
| | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | 139 |
| 7 | **உரைநடை** | **இலக்கியத்தில் மேலாண்மை** | **144** |
| | செய்யுள் | அதிசயமலர் | 145 |
| | | தேயிலைத்தோட்டப் பாட்டு | 146 |
| | | புறநானூறு | 146 |
| | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | 147 |
| | இலக்கணம் | தொன்மம் | 149 |
| 8 | **உரைநடை** | **நமது அடையாளங்களை மீட்டல்** | **153** |
| | செய்யுள் | முகம் | 156 |
| | | இரட்சணிய யாத்ரிகம் | 156 |
| | | சிறுபாணாற்றுப்படை | 157 |
| | துணைப்பாடம் | கோடை மழை | 159 |
| | இலக்கணம் | குறியீடு | 160 |
| **12 ஆம் வகுப்பு மாதிரி வினாத்தாள்** | | | 164 |

**இயல் 2**

**உரைநடை உலகம்**

## இயற்கை வேளாண்மை

- மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை.
- **'உழவு உலகிற்கு அச்சாணி'** என்று வள்ளுவரும் **'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'** என்று பாரதியாரும் போற்றுகின்றனர்.
- பனைமரம் ஏழைகளோட கற்பக விருட்சம்னு சொல்லலாம். சிறந்த காற்றுத் தடுப்பானும்கூட ஆழத்தில் நீர்மட்டம் குறையாம நீரைச் சேமிக்க வைக்கிற தன்மையுடையது.
- இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது.
- இந்த வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் ஜப்பான் அறிஞர் மசானபு ∴புகோகா.
- இவர் 1978ஆம் ஆண்டு "ஒற்றை வைக்கோல் புரட்சி" என்னும் நூலை எழுதியவர்.
- உழப்படாத நிலம் வேதியியல் உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் ஆகிய ஐந்து வேளாண்மை மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர்.

**மசானபு ∴கோகா**

- ☞ இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய்.
- ☞ அதேநேரம் எளிதில் சிதைந்துவிடும் வகையில் மென்மையானதும்கூட.
- ☞ நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால் பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும்.
- ☞ விவசாயத்தின் வசந்தகாலமாகஇயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்.
- ☞ வைக்கோல் புரட்சி நூலை எழுதியவர் ஜப்பானை சேர்ந்தவர்.

- இது உளுந்து, நெல்லுக்கு ஊடுபயிராகப் போடுவது. இதை அறுவடை செய்தபின், அதன் வேர் முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன், நிலத்தின் வளத்தைப் பெருக்கி அடுத்த விளைச்சலை அதிகரிக்கச்செய்யும்.

**கவிதைப்பேழை**

**இயல் 2**

## ஏதிலிக்குருவிகள்

- உயிர்களின் இருப்பை இயற்கைச்சூழலே முடிவு செய்கிறது.
- இயற்கைக்கும் மனிதர்களுக்கும் தொப்புள்கொடி மழைத்துளி.
- மண்ணில் முதல்துளி விழுகையில் உயிர்கள் மலர்கின்றன.
- **மார்ச் 20 – உலகச் சிட்டுக்குருவிகள் தினம்**
- வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டைச் சேர்ந்த அழகிய பெரியவனின் இயற்பெயர் அரவிந்தன்.
- புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற படைப்புத் தளங்களில் இயங்குபவர் 'தகப்பன்கொடி' புதினத்திற்காக 2003-ம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர்.
- குறடு, நெரிக்கட்டு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு ஆகிய கவிதைத் தொகுப்புகளும் மீள்கோணம், பெருகும் வேட்கை உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இவரது படைப்புகள்.

## கவிதைப்பேழை

### இயல் 2

## திருமலை முருகன் பள்ளு

❖ உழவர் உழத்தியரது வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்துவதே பள்ளுச் சிற்றிலக்கியத்தின் உட்கோளாகும்.
❖ நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது என்பர்.
❖ வேளாண்மை இலக்கியமான பள்ளு அரிய பல செய்திகளின் கருவூலமாக விளங்குகிறது.

**சொல்லும் பொருளும்**

❖ வட ஆரிநாடு - திருமலை
❖ தென்ஆரிநாடு - குற்றாலம்
❖ ஆரளி - மொய்க்கின்ற வண்டு
❖ இந்துளம் - இந்தளம் எனும் ஒரு வகைப் பண்
❖ இடங்கணி - சங்கிலி
❖ உளம் - உள்ளான் என்ற பறவை
❖ சலச வாவி - தாமரைத் தடாகம்
❖ தரளம் - முத்து
❖ கா - சோலை
❖ முகில்தொகை - மேகக் கூட்டம்
❖ மஞ்ஞை - மயில்
❖ கொண்டல் - கார்கால மேகம்
❖ மண்டலம் - உலகம்
❖ வாவித் தரங்கம் - குளத்தில் எழுந்த அலை
❖ அளி உலாம் - வண்டு மொய்க்கின்ற
❖ வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும்.
❖ மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த **உள்ளான் பறவை** வாலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும்.
❖ இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற **திருமலைச் சேவகன்** வீற்றிருக்கின்றார்.
❖ தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும்.
❖ இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில் அகில்புகையின் நறுமணம் பரவிக் கொண்டே இருக்கும்.
❖ இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.

**இலக்கணக் குறிப்பு**

❖ செங்கயல், வெண்சங்கு - பண்புத்தொகைகள்
❖ அகிற்புகை - ஆறாம் வேற்றுமைத்தொகை
❖ மஞ்ஞையும் கொண்டலும் - எண்ணும்மை
❖ கொன்றைசூடி - இரண்டாம் வேற்றுமைத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

❖ ஈன்ற - ஈன் + ற் + அ
❖ ஈன் - பகுதி
❖ ற் - இறந்தகால இடைநிலை
❖ அ - பெயரெச்ச விகுதி

**புணர்ச்சி விதி**

- ❖ செங்கயல் - செம்மை + கயல்
- ❖ ஈறுபோதல் - செம் + கயல்
- ❖ முன்னின்ற மெய் திரிதல் - செங்கயல்

- ❖ பள்ளு 96 வகையான சிற்றிலக்கிய வகைகளிள் ஒன்று.
- ❖ இது உழத்திப் பாட்டு எனவும் அழைக்கப்படும்.
- ❖ தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சாரும்.

**மாடுவகைகள்**

- ❖ காரி, தொந்திக்காளை, மால்காளை, மறைகாளை, மயிலைக்காளை, மேழைக்காளை, செம்மறையான், கருமறையான்.

**உழவுக் கருவிகள்**

- ❖ கலப்பை, நுகம், பூட்டு, வள்ளைக்கை, உழக்கோல், கொழு கயமரம், மண்வெட்டி, வடம்.

**சொற்சுவை**

- ❖ நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்த களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவு என்பதாகும்.
- ❖ கண்காணி என்பது இந்த ஒப்படியை மேற்பார்வை செய்பவரைக் குறிக்கும்.

**நூல்வெளி**

- ❖ திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திற்கு அருகில் உள்ளது பண்புளிப்பட்டணம். இவ்வூர் **'பண்பை'** என்றும் **'பண்பொழில்'** என்றும் அழைக்கப்படும்.
- ❖ இங்குள்ள சிறு குன்றின் பெயர் திருமலை.
- ❖ குன்றின் மேலுள்ள முருகக்கடவுளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திருமலைமுருகன் பள்ளு பாடப்பட்டுள்ளது.
- ❖ இந்நூலில் கலித்துறை, கலிப்பா, சிந்து ஆகிய பாவகைகள் விரவி வந்துள்ளன.
- ❖ இந்நூல் **'பள்ளிசை'** என்றும் **'திருமலை அதிபர் பள்ளு'** எனவும் வழங்கப்படுகிறது.
- ❖ திருமலை முருகன் பள்ளு நூலின் ஆசிரியர் பெரியவன் கவிராயர்.
- ❖ இவர் காலம் 18ஆம் நூற்றாண்டு.

## கவிதைப்பேழை

**இயல் 2**

## ஐங்குறுநூறு

**ஆடுகம் விரைந்தே**

❖ "காயா கொன்றை நெய்தல் முல்லை
போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்
பவணி கொண்டன்றால் புறவே
பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே

- பேயனார்.

(கிழவன் பருவம் பாராட்டும் பத்து. 412)

**சொல்லும் பொருளும்**

- ❖ காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் } - மழைக்கால மலர்கள்
- ❖ போது - மொட்டு

- அலர்ந்து - மலர்ந்து
- கவினி - அழகுற

**இலக்கணக் குறிப்பு**

- ஆல் - அசைநிலை
- கண்ணி - அண்மை விளிச்சொல்
- ஆடுகம் - தன்னைப் பன்மை வினைமுற்று

**நூல்வெளி**

- ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல்.
- திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக ஐந்து திணைகளுக்கும் ஐந்நூறு பாடல்கள் கொண்டது.
- ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்:
  - குறிஞ்சித்திணை - கபிலர்
  - முல்லைத்திணை - பேயனார்
  - மருதத்திணை - ஓரம்போகியார்
  - நெய்தல் திணை - அம்மூவனார்
  - பாலைத்திணை - ஓதலாந்தையார்
- ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவா பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்.
- தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.
- பேயனார், சங்ககாலப் புலவர் புலவர்களில் ஒருவர் இவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

## விரிவானம்

## இயல் 2

## யானை டாக்டர்

- காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்கும் யானைகளைக் காட்டின் மூலவர் என்பர்.
- டாக்டா வி.கிருஷ்ணமூர்த்தி வனத்தறையின் மிருக டாக்டராக முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் டாப் ஸ்லிப்புக்கு வந்தவர்.
- டாக்டர் கே. யானைகளுக்குரிய சிறப்பு மருத்துவராக அறிப்பட்டவர்.
- டாக்டர்.கே. யானைகளின் உடல்நிலையைப் பேணுவதற்காக உருவாக்கிய விதிமுறைகள் தான் இந்திய வனவியல் துறையின் கையேடாக இன்றும் உள்ளது.
- கிட்டத்தட்ட அதே குறிப்புகளின் இன்னொரு வடிவமே காசிரங்கா காண்டாமிருகங்களுக்கும் பயன்டுத்தப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1. கயம்** | **2. வேழம்** | **3. களிறு** | **4. பிளிறு** | **5. களபம்** | |
| **6. மாதங்கம்** | 7. கைம்மா | 8. வாரணம் | 9. அஞ்சனாவதி | 10. அத்தி | |
| **11. அத்தினி** | 12. அரசுவா | 13. அல்லியன் | 14. அனுபமை | 15. ஆனை | |
| **16. இபம்** | 17. இரதி | 18. குஞ்சரம் | 19. வல்விலங்கு | 20. கரி | 21.அஞ்சனம் |

- காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
  யாழ்வரைத் தாங்கி யாங்கு

  - கலித்தொகை 2 : 26-27

- மனிதர்கள் தவிர்த்த மற்றைய விலங்குகளின் யானை அதிகநாள் வாழும் தரைவாழ் விலங்கு.
- சிங்கம் புலி முதலியவையும் நெருங்க அஞ்சும்வலிமை கொண்டவை.
- யானைகள் குடும்பமாக வாழும். அதிக ஞாபக சக்தி கொண்டவை.
- யானைகளின் மூன்று சிற்றினங்கள் இன்று உலகில் எஞ்சியுள்ளன.
    - ஆப்பிரிக்க புதர்வெளி யானைகள்
    - ஆப்பிரிக்க காட்டு யானைகள்
    - ஆசிய யானைகள்
- பொதுவாக எல்லா யானைகளும் ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன.
- யானை டாக்டர் என்று அழைக்கப்பட்ட டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, தமிழகத்தின் முக்கியமான காட்டியல் வல்லுநர்களில் ஒருவர்.
- யானைகளுக்காகத் தம் வாழ்நாளையே அர்பணித்தவர்.
- உலகப்புகழ் பெற்ற அறிவியல் இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றார்.
- **வனப்பேணுநர்களுக்கு** வழங்கப்படும் மிக உயரிய விருதான **வேணுமேனன் ஏலீஸ்** விருதினை **2000**ஆம் ஆண்டில் பெற்றார்.
- தமிழகக் கோவில் யானைகளுக்கு வனப்புத்துணர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அரசின் மூலம் செயல்படுத்தியவர்.
- ஜெயமோகன், நாகர்கோவிலைச் சேர்ந்தவர்.
- விஷ்ணுபுரம், கொற்றவை உள்ளிட்ட பல புதினங்களோடு சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.
- இயற்கை ஆர்வலர். யானையைப் பாத்திரமாக வைத்து **ஊமைச்செந்நாய், மத்தகம்** ஆகிய கதைகளையும் எழுதியுள்ளார்.
- இந்தக் குறும்புதினம் ‘அறம்’ என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்று உள்ளது.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம் - ஆபிரகாம் பண்டிதர் (1859 - 1930)

- தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகேயுள்ள **சாம்பவர் வடகரை** என்னும் சிற்றூரில் பிறந்தவர்.
- திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும்போதே சித்தமருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் ‘பண்டுவர்’ (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார்.
- பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று, ‘சங்கீத வித்தியா மகாஜன சங்கம்’ என்னும் அமைப்பை உருவாக்கியவர்.
- அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் **‘கருணாமிர்த சாகரம்’**.
- எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

**நயம் பாராட்டுக:**

- மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
  வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!

- கவிமணி

**கலைச்சொல் அறிவோம்**

- இயற்கை வேளாண்மை - Organic Farming
- வேதி உரங்கள் - Chemical Fertilizers
- ஒட்டு விதை - Shell Seeds
- தொழு உரம் - Farmyard Manure
- மதிப்புக்கூட்டுப் பொருள் - Value added Product
- வேர்முடிச்சுகள் - Root Nodes

- ❖ தூக்கணாங்குருவி - Weaver Bird
- ❖ அறுவடை - Harvesting

**அறிவை விரிவு செய்**

இயற்கை வேளாண்மை - கே.நம்மாழ்வார். பனைமரமே பனைமரமே - ஆ.சிவசுப்பிரமணியன். யானைகள் - அழியும் பேருயிர் - ச.முகமது அலி, க. யோகானந்த். பறவை உலகம் - சலீம் அலி Elephants: Majestic Creatures of the Wild – Shoshani.J.

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

   அ) ஏதிலிக்குருவிகள் -மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு -சிறுகதை

   **இ) யானை டாக்டர் -குறும் புதினம்** ஈ) ஐங்குறுநூறு -புதுக்கவிதை

2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன -

   அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் **ஈ) இவை மூன்றும்**

3. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்

   அ) வானம் இடிந்தது **ஆ) மழை பெய்யவில்லை** இ) மின்னல் வெட்டியது

   ஈ) வானம் என்பது பொய்யானது.

4. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை

   அ. மதிப்புக் கூட்டுப்பொருள் ஆ) நேரடிப் பொருள்

   **i) அ மட்டும் சரி** ii) ஆ மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ தவறு, ஆ சரி

5. பிழையான தொடரைக் கண்டறிக.

   அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

   ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

   **இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.**

   ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறியமுடியும்.

## உரைநடை உலகம்

### இயல் 7

## காலத்தை வென்ற கலை

- பெரியகோவிலின் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் கோபுரம். இராசராசன் 988ஆம் ஆண்டு சேரநாட்டை வெற்றிகொண்டதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்குக் "கேரளாந்தகன் வாயில் கோபுரம்: எனப்பெயரிடப்பட்டது.
- முதலில் உள்ளது கேரளாந்தகன் திருவாயில், அதை அடுத்து உள்ளது இராசராசன் திருவாயில் இவை சோழர்களின் தனி அடையாளம்.
- 'அகநாழிகை'யின் மேல் அடைக்கப்படுவது கருவறையைத்தான் அகநாழிகை என்று அழைப்பார்கள். (குறு நகையுடன்)
- தஞ்சைப் பெரிய கோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் ஆகும்.
- இராசராசசோழனால் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் முயன்று இது கட்டி முடிக்கப்பட்டது. தட்சிண மேரு என்று அழைக்கப்பட்ட இக்கோவில் விமானம் 216 அடி உயரம் உடையது. கருவறை விமானம் 13 தளங்களையுடையது.
- செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவது போல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர்.
- 7 ஆம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவம் இது மகாபலிபுரம் கடற்கரைச் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில் பனைமலைக்கோவில் ஆகியவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.
- அந்த வகையில் முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப்பெரிய கோவில் இதுதான்.

> 11 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோவிலை 1003 ஆம் ஆண்டு தொடங்கி 1010 ஆண்டுவரை கட்டினார். 2010 இல் இக்கோவிலின் 1000 ஆவது ஆண்டு நிறைவடைந்தது.

- சோழச் செங்கணான் எழுபத்தெட்டுக் கோவில்களைக் கட்டியிருப்பதாகத் திருநாவுக்கரசர் தம் பதிகமொன்றில் கூறுகிறார்.
- செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியவை இல்லாமலே பிரம ஈஸ்வர விஷ்ணுக்களுக்கு 'விசித்திர சித்தன்' என்று அழைக்கப்பட்ட முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் குடைவரைக் கோவில்களை அமைத்ததாக மண்டகப்பட்டுக் கல்வெட்டு கூறுகின்றது.
- இராசசிம்மனே விஞ்சும் வகையில் உன்னதச் சிறப்பு எழிலும் வாய்த்ததாகக் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலை அமைத்து அழியாப் புகழ் பெற்றான்.
- கட்டடக்கலை என்பது உறைந்துபோன இசை – பிரடிரிகா வொன்ஸ்லீவிங்
- இந்தியக்கட்டடக் கலைப்பாணியை நாகரம்,வேசரம், திராவிடம் என்று மூன்றாகக் கூறுவர். அதில் தஞ்சைக்கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.
- 1886 ஆம் ஆண்டு ஜெர்மனி அறிஞர் ஷீல்ஸ் ஆறு ஆண்டுகள் தீவிரமாகக் கல்வெட்டுகளைப் படியெடுத்து வாசித்து இக்கோவிலை இராசராச சோழன்தான் கட்டினான்.
- 1930ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த எஸ்.கே. கோவிந்தசாமி தஞ்சை பெரிய கோவில் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகைப் பகுதிச்சுவர்களில் ஓவியங்கள் காணப்பட்டதை முதன் முதலில்கண்டறிந்தார்.

- அதில் தட்சிணாமூர்த்தி ஓவியம், சுந்தரர் வரலாறு, திரிபுராந்தகர் ஓவியம் முதலியன சுவர் முழுவதுமாகப் பெரிய அளவில் வரையப்பட்டுள்ளன.
- பெரிய நந்தியும் மண்டபமும் நாயக்கர் காலத்து தம்பி சோழர் காலத்து நந்தி தற்போது தென்புறத் திருச்சுவற்றில் உள்ளது.
- அந்த சிகரத்திலுள்ள திருமந்திரக் கல் ஒற்றைக்கல் அன்று. பதின்மூன்று தளங்களை உடைய கருவறை விமானத்தின் மேல் எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுபழச்சுவைகளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக வைத்து ஒட்டப்பட்டன.

**ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்**

ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் புதுமை என்று பொருள். சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது. இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் காணலாம்.

- 12ஆம் நூற்றாண்டிலிருந்து கோபுரங்கள் தனிச்சிறப்புப் பெற்றன என்று சொல்லலாம். வெளிக்கோபுரத்தை உயரமாகவும் உட்கோபுரத்தை உயரம் குறைவாகவும் இரண்டு வகைக் கோபுரங்களைக் கட்டும் புதிய மரபைத் தோற்றுவித்தவன் இராசராசன்.
- அதனைத் திருவாயில் என்று சொல்வார்கள் கங்கைகொண்ட சோழபுரம்,தாராசுரம் திரிபுவனம் ஆகிய இடங்களில் இரண்டு வாயில்கள் இருப்பதைப் பார்த்திருக்கிறோம்
- பெரியவர்: நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப் பெறும் மரபு இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்திலிருந்து தொடங்கியது. கீழ்ப்பகுதியைக் கல்லாலும் மேற்பகுதியைச் செங்கற்களாலும் கட்டியிருப்பர்
- .புகழ்பெற்ற கோவில்கள் பலவற்றிலும் மிகவுயர்ந்த கோபுரத்தை எழுப்பியது விஜயநகர அரசு காஞ்சி, தில்லை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள கோவில்களில் உள்ள கோபுரங்கள் எல்லாமே 150 அடிக்கு மேல் உயரம் உள்ளவை.
- நிலா: இராசராசனின் பட்டத்தரசி ஒலோகமாதேவி திருவையாற்றில் கட்டிய கோவில் ஒலோகமாதேவீச்சுரம் என்று வழங்கப்படும். அந்தக்கோவில் உள்ள கல்வெட்டில்.
- “ உடன் கூட்டத்து அதிகாரம் செய்கின்ற<br>கோவலூர் உடையான் காடந்<br>நூற்றெண்பதையும் அதிகாரிச்சி<br>எருதந் குஞ்சிர மல்லியையும்”
- ‘எருதந் குஞ்சிர மல்லி’ என்ற பெண் அதிகாரியை குறிப்பிடப்பட்டுள்ளது.
- முதலாம் இராசாதிராசன் காலத்திலும் ஓர் அதிகாரிச்சி பற்றி குறிப்பு இருக்கிறது. அவர் பெயர் அதிகாரிச்சி சோமயன் அமிர்தவல்லி மகிழ்ச்சிதானே!

கோவிலை எடுப்பித்தவர்கள் பற்றிய கல்வெட்டில் “நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும் நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் இந்த கல்லிலே வெட்டி அருள்க. இராசராசன், மற்றவர்களின் கொடையையும் உலகம் அறியும்படி செய்துள்ளார்.

- கோவிலைக் கட்டிய தச்சர்களின் பெயர்களை வீரசோழன் குஞ்சரமல்லன் இராசராசப் பெருந்தச்சன் மதுராந்தகனான நித்தவினோதப் பெருந்தச்சன், இலத்திசடையனாக கண்டராதித்தப் பெருந்தச்சன், எடுப்பித்தவன் பெயர் மட்டும் பொறிக்கப்பட்டும் நிலையில் தச்சர்களின் பெயரும் இந்த அழியாக் கோவிலில் பதித்திருப்பது மேலும் ஒரு புதுமை.

## கவிதைப்பேழை

### இயல் 7

## ஆத்மாநாம் கவிதைகள்

- மதுசூதனன் என்ற இயற்பெயரைக் கொண்ட ஆத்மாநாம் தமிழ்க்கவிதை ஆளுமைகளில் குறிப்பிடத்தக்கவர்,
- காகிதத்தில் ஒருகோடு அவருடைய முக்கியமான கவிதைத்தொகுப்பு **‘ழ’** என்னும் சிற்றிதழை நடத்தியவர் .
- கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என்று மூன்று தளங்களிலும் இயக்கியவர் இவருடைய கவிதைகள் ஆத்மாநாம் கவிதைகள் என்னும் பெயரில் ஒரே தொகுப்பாகப் பெற்றுள்ளன.

## கவிதைப்பேழை

### இயல் 7

## குற்றாலக் குறவஞ்சி

- சமய நூல்கள் கடவுளரைப் பாடின சிற்றிலக்கிய கடவுளரோடு மனிதர்களையும் பாடின. அவற்றுள் இயற்றமிழின் செழுமையையும் இசைத்தமிழின் இனிமையையும் நாடகத்தமிழின் எழிலினையும் ஒருங்கே கொண்டு முத்தமிழ்க் காவியமாகத் திகழ்வது குற்றாலக் குறவஞ்சி
- குறவஞ்சி என்பது ஒரு வகை நாடக(opera) இலக்கிய வடிவமாகும்.
- இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று பாட்டுடைத் தலைவன் உலா வரக்கண்ட தலைவி, அத்தலைவன் மீது காதல்கொள்ள, குறவர் குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி தலைவிக்குத் குறிகூறிப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுவதால் குறவஞ்சி என்னும் பெயர்பெற்றது.
- இது குறத்திப்பாட்டு என்றும் வழங்கப்படுகின்றது. “கவிதைக்கிரீடம்” என்று போற்றப்பட்டது.

**சொல்லும் பொருளும்**

- கொத்து - பூமாலை, குழல் - கூந்தல், நாங்கூழ் - மண்புழு, கோலத்து நாட்டார் - கலிங்க நாட்டார், வரிசை - சன்மானம்.

**நூல்வெளி:**

- தமிழ்நாட்டின் தென்காசிக்கு அருகில் அமைந்திருந்த குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பை புகழ்ந்து அங்குள்ள குற்றாலநாதனைப் போற்றிப் பாடப்பட்டது குறவஞ்சி, இந்நூல், திரிகூட ராசப்பக் கவிராயரின் “கவிதைக்கிரீடம்” என்று அரங்கேற்றப்பட்டது.
- மதுரை முத்துவிசயரங்க சொக்கலிங்கனார் விருப்பத்திற்கு இயங்கப் பாடி அரங்கேற்றப்பட்டது. திரிகூடராசப்பக் கவிராயர் திருநெல்வேலியில் தோன்றியவர். குற்றாலநாதர் கோவிலில் பணிபுரியும் காலத்தில் சைவசமயக் கல்வியிலும் இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றார்.
- ‘திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான் என்று சிறப்புப் பட்டபெயர் பெற்றவர். குற்றாலத்தின் மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ் யமக அந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியிருக்கின்றார்.

## கவிதைப்பேழை

### இயல் 7

## திருச்சாழல்

- மொழிவிளையாட்டின் மூலம் இறைவனின் பெருமை பேசும் செய்யுள் வகை திருச்சாழல் அகும்.
- ஒருபெண் இறைவனைப் பழிப்பதுபோலவும் இன்னொருத்தி இறைவனது செயலை நியாயப்படுத்துவது போலவும் பாடப்படுவது இது இவ்வகையில் மாணிக்கவாசகர் இறைவனின் பெருமையைத் தெரிவிக்கும் இருபது பாடல்களைப் பாடியுள்ளார்.

**செல்லும் பொருளும்:**

காயில் - வெகுண்டால், அந்தம் - முடிவு, அயன் - பிரமன், மால் - விஷ்ணு, ஆலாலம் - நஞ்சு.

- சாழல் என்பது பெண்கள் விளையாடும் ஒரு வகையான விளையாட்டு ஒருத்தி வினா கேட்க, மற்றொருத்தி விடை கூறுவதாக அமைந்திருக்கும்,
- இறைவன் செயல்களையும் அவற்றால் விளங்கும் உண்மைகளையும் விளக்குவது திருச்சாழல் வடிவமாகும்.
- திருமங்கையாழ்வாரும் தமது பெரிய திருமொழியில் இதே வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளார்.
- மக்கள் வழக்கில் ஒருவர் விடுகதை சொல்லி அதற்கு மற்றொருவர் விடை கூறியும் விளையாடுவது இன்றைக்கும் வழக்கில் உள்ளது.

**நூல்வெளி**

- திருவாசகம் என்பது சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும். இயற்றியவர் மாணிக்கவாசகர்.
- இது சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது.
- திருவாசகத்தில் 51 திருப்பதிகங்கள் உள்ளன. இவற்றுள் மொத்தம் 658 பாடல்கள் அடங்கியுள்ளன.
- இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப் பெற்றுள்ளன.
- பக்திச்’ சுவையும் மனத்தை உருக்கும் தன்மையும் கொண்டவை திருவாசகப் பாடல்கள் ‘திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்’ என்பது முதுமொழி.
- திருச்சாழல் தில்லைக் கோவிலில் பாடப்பெற்றது.
- ஜி.யு.போப் திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர். திருவாதவூரைச் சேர்ந்தவர்.
- இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார். மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் திருவாசகம், திருக்கோவையார் ஆகியனவாகும்.

## விரிவானம்

### இயல் 7

## இசைத்தமிழர் இருவர்

- உலக இசைப்பேரேட்டின் தமிழகத்து முத்திரைகள், அவர்கள் சிம்பொனித் தமிழர் இளையராஜா, ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர்.ரகுமான் ஆகியோர் ஆவார்.

**சிம்பொனித் தமிழர்**

- **ராயல்.**பில்ஹார்மோனிக் இசைக்குழுவுக்கு சிம்பொனி இசைக்கோலத்தை அமைத்துக்காட்டியவர் இசைமேதை(மாஸ்ட்ரோ) இளையராஜா, அவர் தமிழ்நாட்டின்தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர் . அவருடைய இயற்பெயர் இராசையா

- தாய் பாடும் தாலாட்டில் தொடங்கித் தமிழ் நாட்டின் அனைத்து இசை வடிவங்களையும் அசைபோட்ட இசை மேதை ஆவார்
- அன்னக்கிளி படத்தில் இசை அமைப்பாளராக அறிமுகமான இளையராஜாவின் இசையோட்டம். எழுபது, எண்பதுகளில் மெல்லத் தோன்றிப் புது வேகம் கொண்ட சமூக மாற்றங்களில் குறியீடாக இளையராஜாவின் இசை திகழ்ந்தது.
- அவருடைய இசை ஐவகை நிலப்பரப்புகளையும், காட்சிப்படுத்தும் மெட்டுகளைக் கொண்டது. இன்றளவும் நெடுந்தொலைவுப் பயணங்களின் வழித்துணையாக அவரது இசை இருப்பதற்கு இதுவுமொரு காரணம். வற்றாத நதிகள் பாயும் மலைகள் நிறைந்த ஜம்மு, காஷ்மீரின் பஹார் இன மக்களின் நாட்டுப்புற இசையில் புல்லாங்குழலில் வழிந்தோடும் பஹாடி முதல் மதுரை மக்களின் கிராமிய இசையிலிருந்து முகிழ்த்துச் செவ்வியல் இசையில் கோலோச்சும் ஆனந்தபைரவி (அன்னக்கிளி உன்னைத் தேடுதே) வரை அவரது இசையில் பண்கள் இழையோடுகின்றன.

**பெற்ற விருதுகள் சில:**

- இந்திய அரசு : பத்மவிபூஷண் விருது
- சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது
- சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருது
- தமிழ்நாடு - கலைமாமணி விருது
- மத்தியப்பிரதேசம் - லதா மங்கேஸ்கர் விருது
- கேரளம் - நிஸாகந்தி சங்கீத விருது
- இளையராஜா அவரின் ‘எப்படிப் பெயரிடுவேன்’(How To Name It) என்னும் இசைத்தொகுப்பும் புல்லாங்குழல் இசைக்கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் இணைந்து வெளியிட்ட ‘காற்றைத்தவிர ஏதுமில்லை’ (NOTHING BUT WIND) என்னும் இசைத்தொகுப்பும் கொண்டாடப்பட்டன. “இந்தியா 24 மணிநேரம் (INDIA 24 HOURS) என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னனி இசையில் வெளிப்படுத்தினார்.
- மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப்பாடல்களுக்கு ஆரட்டோரியோ (Oratoric) ‘இராஜாவின் ரமணமாலை’, ‘இளையராஜாவின் கீதாஞ்சலி’ என்னும் தமிழ் இசைத்தொகுப்புகளையும் கன்னட மொழியில் ‘மூகாம்பிகை’ என்ற பக்தி இசைத்தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார்.
- அத்துடன் ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்ற பக்திப்பாடலுக்கும் இசையமைத்துள்ளளார் பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.

**இளையராஜாவின் இசை நுணுக்கம்**

- நாட்டுப்புற இசை வடிவத்தைத் திரையிசையில் தவழவிட்டவராகவே இசைஞானி இளையராஜா அறியப்படுகிறார்.
- நாட்டுப்புறப்பாடலுக்குக் கர்நாடக இசை வடிவமும் கல்யாணி இராகத்தின் ஆரோகசுரங்களைக் கொண்டே (ஏறுவரிசை சுரங்கள்) கலைவாணியே உன்னைத்தானே’ என்னும் பாடலுக்கு மெட்டமைத்திருக்கிறார்.
- மூன்றே மூன்று சுரங்களைக் கொண்டு ஒரு தெலுங்குப்பாடலுக்கு இசையமைத்தும் இருக்கிறார்.
- முழுத் திரைப்படத்துக்கும் அரைநாளில் பின்னனி இசையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்.(நூறாவது நாள்).

- இளையராஜா இசைக்கலைஞர் மட்டுமல்லர், சிறந்த ஒளிப்படக் கலைஞர், கவிஞர், பாடகர்,பால்நிலாப் பாதை, வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கும் எழுத்தாளரும் ஆவார்.
- பரிபாடலில் நோதிறம், பாலையாழ், காந்தாரம் முதலிய பண்கள் காணப்படுகின்றன. சைவத்திருமுறைகளில் காரைக்கால் அம்மையார் நட்டபாடையிலும் இந்தளத்திலும் பாடியுள்ளார்.
- தேவாரத்தில் 23 பண்களில் பாடல்கள் உள்ளன. தேவாரத்தில் இல்லாது திவ்ய பிரபந்தத்தில் மட்டும் காணப்படும் பண்கள்: நைவளம், அந்தாளி, தோடி, கல்வாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம் ஆகியவை சாளரபாணி என்ற பண் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படுகிறது.
- **மகாத்மா காந்தி** எழுதிய ஒரே பாடலான **"நம்ரதா கே சாகர்"** என்னும் பாடலுக்கு இசையமைத்து, இந்துஸ்தானி இசைப்பாடகர் அஜெய் சக்கரவர்த்தியைப் பாடவைத்து இசைக்கோவையை வெளியிட்டிருக்கிறார் ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக்கோவையை உருவாக்கியவர் இவரே.
- சிம்பொனி இசைப்பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதமாவது ஆகும். வெறும் பதின்மூன்று நாள்களில் இச்சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்.

**ஆஸ்கர் தமிழர்**

- அவருக்கே 2009 ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படப் பின்னனி இசைக்கான ஆஸ்கர் விருது என்று அறிவிக்கப்பட்டது.
- இவருடைய தந்தை ஆர்.கே.சேகர் மலையாளத் திரைப்பட உலகில் புகழுடன் விளங்கிய இசைக்கலைஞர், இளம்வயதிலேயே ஏ.ஆர்.ரஹ்மான் தம் தந்தையின் இசைப்பயணத்தில் இணைந்து கொண்டார்.
- நான்கு வயதிலேயே ஹார்மோனியம் இசைப்பதில் திறமை பெற்றிருந்தார்.
- ஏ.ஆர் இரகுமான் 1992 ஆம் ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசைமைப்பாளராகத் தமது திரையிசைப் பயணத்தைத் தொடங்கினார். தமிழ்த்திரைப்பட இசையுலகில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.
- தம் முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற சிறப்பினைப் பெற்றார்.
- உலகை வெற்றிகொள்ளப் புறபட்ட தமிழர்களுடன் வலம் வந்த இசைத்தோழமை ஏ.ஆர் இரகுமான். தொண்ணூற்றுகளில் தொழில்நுட்பக்கல்வி பயின்று உலகெங்கும்பரவிய தமிழ் இளைஞர்களை இணைத்தது அவர்தம் இசை.
- அவர் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இசைப் பண்பாட்டின் குறியீடுகளைத் தம் இசையில் தவழவிட்டார்.

**பெற்றவிருதுகள் சில:**

- இந்திய அரசு - பத்மவிபூஷண் விருது
- தமிழ்நாடு - கலைமாமணி விருது
- கேரளம் - தங்கப்பதக்கம்
- உத்திரபிரதேசம் - "ஆவாத் சம்மான்:" விருது
- மத்தியபிரதேசம் - "லதா மங்கேஷ்கர்" விருது
- மொரீஷியஸ் - தேசிய இசை விருது
- மலேசியா - தேசிய இசை விருது
- ஸ்டான்.ஃபோர்ட் பல்கலைக்கழகம் - சர்வதேச இசை விருது.

- நாட்டுப்புற இசை, கர்நாடக, இசை, இந்துஸ்தானி இசை இவற்றுடன் மேற்கத்திய உலகளாவிய இசை முறைகளையும் கலந்து புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத்தரத்தில் இசையமைத்துடன் பல இளம் பாடகர்களையும் அறிமுகம் செய்தார்.
- மெட்டுக்கு இணையாக இசைக் கோவையை வழங்கியதில் தனித்துவமானவர் இளையராஜா எனில் இதை எடுக்க சொன்னவர் இரகுமான் ஆவார்.
- இவர் இசையமைத்த "வந்தே மாதரம்" "ஜன கண மன" என்னும் இசைத்தொகுதிகள் நவீன இசை வடிவில் நாட்டுப்பற்று உணர்வை மிளிரச் செய்தார்.
- மலையாளம்,தெலுங்கு,கன்னடம், உள்ளிட்ட பல தென்னிந்திய மொழிப்படங்களுக்கும், நாடகங்களுக்கும் இசையமைத்ததோடு இந்தித் திரைப்பட உலகத்திலும் தம் இசை முத்திரையை பதித்தார்.
- வெவ்வெறு கலாச்சார மக்களையும் தம் இசையால் ஒருங்கிணைத்ததுடன் திரையிசையில் சூ.ஃ.பி இசையை அறிமுகப்படுத்திய சிறப்பும் இவருக்குண்டு.
- **"ஸ்லம்டாக் மில்லியனர்"** என்ற திரைப்படத்தின் இசைக்காக **"கோல்டன் குளோப்"** விருது பெற்றதன் மூலம் உலகளாவிய புகழ் பெற்றார்.
- அவ்விருது பெற்ற முதல் இந்தியரும் இவரே. இவரின் ஆஸ்கர் சாதனை சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு வாழ்க்கைப் பாடமாகும்.
- அதே படத்தின் இசைக்காக கிராமி விருதையும் பெற்றார்.

## இனிக்கும் இலக்கணம்

### இயல் 7

## கலைச்சொல்லாக்கம்

- மருத்துவமனை (clinic)
- குருதிப்பிரிவு (Blood group)
- மருந்தாளுநர் (Pharmacist)
- ஊடுகதிர் (X – Ray)
- குடற்காய்ச்சல் (Typhoid)
- களிம்பு (Ointment) முதலியவை மருத்துவக் கலைச் சொற்கள்
- எழுதுசுவடி (NoteBook)
- விடைச்சுவடி (Answer book)
- பொதுக்குறிப்புச்சுவடி (Rough Notebook)
- விளக்கச்சுவடி (Prospectus) போன்றவை.
- Smart phone : திறன்பேசி
- Touch screen : தொடுதிரை
- Bug : பிழை
- Gazette : அரசிதழ்
- Despatch : அனுப்புகை
- Subsidy : நல்கை
- Ceilling : உச்சவரம்பு
- Circular : சுற்றறிக்கை
- Subjunior : மிக இளையோர்
- Super Senior : மீமூத்தோர்

- Carrom : நாலங்குழி ஆட்டம்
- Sales Tax : விற்பனைவரி
- Customer : வாடிக்கையாளர்
- consumer : நுகர்வோர்
- Account : பற்று வரவுக் கணக்கு
- Referee : நடுவர்
- உலகின் தொன்மையான மொழிகளுள் இன்றும் நிலைத்து நிற்கின்ற மொழி தமிழ்மொழி.
- உலகின் எந்த மூலையில் எவ்வகையான கண்டுபிடிப்பு நிகழ்ந்தாலும் உடனுக்குடன் ஜப்பானியர்கள் தங்கள் மொழியில புதிய சொல்லை உருவாக்கிவிடுவர்.
- தாய்மொழியில் புதிய சொல்லை ஜப்பானியர்கள் அறிவியல் தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பதால் அங்கே நாள்தோறும் புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன.
- அறிவியல் கலைச் சொற்களைத் தமிழாக்குவதில் உள்ள முறைகள் குறித்து அறிவியல் அறிஞர் வா.செ.குழந்தைசாமி பின்வருமாறு:
- பழந்தமிழிலக்கியச் சொல்லைப் பயன்படுத்துதல் : வலவன்(polot)
- பேச்சுமொழிச் சொல்லைப் பயன்படுத்துதல் : அம்மை
- பிறமொழிச் செல்லைப் பயன்படுத்துதல் : தசம முறை (Decimal)
- புதுச்சொல் படைத்தல் : மூலக்கூறு (Molecule)
- உலகவழக்கை ஏற்றுக் கொள்ளல் : எக்ஸ் கதிர் (x-ray)
- பிறமொழித்துறைச் சொற்களை மொழி பெயர்த்தல் : ஒளிச்சேர்க்கை
- ஒலிபெயர்த்துப் பயன்படுத்தும் சொற்கள் : மீட்டர், ஓம்
- உலக அளவிலான குறியீடுகள், சூத்திரங்கள் : £√A=πr² H2OCa
- ஒரு சொல்லை மொழிபெயர்க்கும் போதோ அல்லது புதிய சொல்லை உருவாக்கும் போதோ அச்சொல் அதே போன்ற வேறு வகை சொற்களை உருவாக்க உதவ வேண்டும்.
- எடுத்துக்காட்டாக Library என்னும் ஆங்கிலச்செல்லுக்கு நூலகம், நூல்நிலையம் ஆகிய சொற்கள் கையாளப்படுகின்றன.
- அச்சொற்களில் நூலகம் என்னும் சொல்லே மேலும் பல சொற்களை உருவாக்கும் ஆக்கத்திறன் கொண்டது.
- Library – நூலகம் Librarian – நூலகர், Library science – நூலக அறிவியல்.
- ‘தென் ஆப்பிரிக்காவின் பெண்கள் விடுதலை’ என்னும் கட்டுரை தொடங்கிய பாரதி Member என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ் சொல்லொன்றை உருவாக்க முனைந்தார்.
- Member என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சர்யம்.
- ஆனால் பொது ஜனங்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன்; உறுப்பாளி? ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனதிற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன்! கடைசியாக மெம்பர் என்று எழுதி விட்டேன். இன்னும் ஆர, அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொருமுறை சொல்லுகிறேன்.

**நிறுத்தக்குறிகள்**

- மறைமலையடிகள், ‘மரணத்தின் பின் மனிதர்நிலை என்னும் நூலை இயற்றினார்.
- பல்வேறு வகையான நிறுத்தக்குறிகளை நமக்கு அறிமுகப்படுத்தி எவ்வெவ்விடங்களில் அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென விளக்கியவர்கள் ஐரேப்பியர்கள் ஆவார்.

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம் - சங்கரதாஸ் சுவாமிகள் (1867 - 1922)**

- நாடகத்தமிழ் வளர்ந்த நல்லறிஞராய்த் திகழ்ந்த **சங்கரதாஸ் சுவாமிகள்** நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் விளங்கியவர்.
- இளமையில் புலவரேறு பழநிதண்டபாணி சுவாமிகளைத் தேடிச் சென்று தமிழறிவைப் பெற்ற இவர் தம்முடைய 16 ஆவது வயதிலேயே கவியாற்றல் பெற்று வெண்பா, கலைத்துறை, இசைப்பாடல்களை இயக்கத் தொடங்கிவிட்டார்.
- இரணியன், இராவணன், எமதருமன், ஆகிய வேடங்களில் நடித்துப் புகழடைந்தபோது அவருடைய வயது 24.
- வண்ணம், சந்தம், பாடுவதில் வல்லவராயிருந்த சுவாமிகளின் ‘சந்தக்குழிப்புகளின் சொற்சிலம்பங்ளைக் கண்டு சங்கரதாஸ் சமரச சன்மார்க்கசபை என்னும் நாடக குழுவை உருவாக்கினார்.
- ஜி. கிட்டப்பா நாடகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். மதுரை வந்த சுவாமிகள் 1918இல் “தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை” என்னும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார்.
- இங்கு உருவானவர்களே டி.கே.எஸ். சகோதரர்கள். சங்கரதாஸ் சுவாமிகளை தமிழ்நாடகத் தலைமை ஆசிரியர் என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர் - நாடகத்துறை கலைஞர்கள்.

**இலக்கியநயம் பாராட்டுக.**

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,

கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,

தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்

வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ.

\- கம்பர்

**கலைச்சொற்கள்**

- நுண் கலைகள் - Fine Arts
- ஆவணப்படம் - Documentary
- கல்வெட்டு - Inscription / Epigraph
- தானியக்கிடங்கு - Grain Warehouse
- பேரழிவு - Disaster
- தொன்மம் - Myth

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. கூற்று 1 : தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.

   கூற்று 2 : அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ∴பிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.

   அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு

   இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி **ஈ) கூற்று இரண்டும் சரி**

2. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது : 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்பட்டது.

   **அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி** ஆ) கவிதைநூல், திருச்சாழல்

   இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

3. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

   அ) விரியன் - 1. தண்டை

   ஆ) திருகுமுருகு - 2. காலாழி

   இ) நாங்கூழ்ப்புழு - 3. சிலம்பு

   ஈ) குண்டலப்பூச்சி - 4. பாடகம்

   i) 3 4 2 1 **ii) 3 1 4 2** iii) 4 3 2 1 iv) 4 1 3 2

4. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

   **அ) சாழல்** ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

5. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்

   அ) மூதூர் **ஆ) வெற்றிடம்** இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

# பனிரெண்டாம் வகுப்பு

இயல் 1

கவிதைப்பேழை

## இளந்தமிழே!

செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்

செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!

மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு

மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!

கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்

குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா,வா!

**- சிற்பி பாலசுப்பிரமணியம்**

**வியர்வை வெள்ளம் - உருவகம்**

- இளந்தமிழே கவிதை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் **நிலவுப்பூ** என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- மொழிபெயர்ப்புக்காகவும் **ஒரு கிராமத்து நதி** என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
- **ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி** முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர்.
- இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.
- மலையாளத்திலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார்.
- சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

உரைநடை உலகம்

இயல் - 1

## தமிழ்மொழியின் நடை அழகியல்

- தொல்காப்பியம், இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம்.
- எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கருதுகிறது.
- கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் (Poeticalness/Literariness)
- கலை முழுமை (Artistic Whole)
- இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் ‘லட்சியப்’ பொருள்களோடு இரண்டற இணைத்து விடுகிறன்றது.

  அந்நில மருங்கின் அறமுதலாகிய<br>
  மும்முதற் பொருட்கும் உரியஎன்ப (தொல்.செய்.105)
- பண்பாட்டின் இலச்சினையாகச் (Symbol of Culture)

**தொல்காப்பியம்**

‘நடைபெற்றியலும்’ (கிளவியாக்கம்-26) நடைநவின்றொழுகும் (செய்.135) தொல்காப்பியம்.

ஆசிரிய நடைத்தே வஞ்சி: ஏனை<br>
வெண்பா நடைத்தே கலி (செய்.107)

- ஒலிப்பின்னல் (Sound Texture)
  கடந்தடு தானை மூவிருங்கூடி
  உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே:
  குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே (புறம்.110)

  படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
  கடாஅ யானைக் கலிமான் பேக (புறம்.145)
  புணரின் புணராது பொருளே: பொருள்வயின்
  பிரியின் புணராது புணர்வே (நற்.16)
  நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை (புறம்.290)
- முல்லைக்கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.
- கி.ராஜநாராயணன், ‘கிடை’ எனும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார்.
- தொகைநிலை (Compound words) என்று தொல்காப்பிய எச்சவியல் பேசுகிறது.
- ‘நீர்படு பசுங்கலம்’ (நற்.308) என்று ஆகும்போது தொகைமொழி.
- மறித்தாக்கம் (Transform)
- கவிதை மறுதலைத் தொடர் (Poetic inversion)
  இடுக வொன்றோ சுடுகவொன்றோ:
  படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே (புறம்.239)
- ‘தொடியுடைய தோள் மணந்தனன்’
- தி.சு.நடராசன் எழுதிய ‘தமிழ் அழகியல்’ என்ற நூலிலிருந்து சில பகுதிகள் தொகுக்கப்பட்டுள்ளது.
- திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி.சு.நடராசன் குறிப்பிடத்தக்கவர்.
- போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகிறவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.
- கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள் உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

## கவிதைப்பேழை

**இயல் - 1**

## தன்னேர் இலாத தமிழ்

- ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
  ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
  மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
  தன்னேர் இலாத தமிழ்.
  பாவகை : நேரிசை வெண்பா
  **அணி: பொருள் வேற்றுமை அணி**
- அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்
- அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்.

## விரிவானம்

### இயல் - 1

## பாரதியின் கடிதம் - தம்பி நெல்லையப்பருக்கு

- தமிழ், தமிழ், தமிழ் -என்று பாரதியார் எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க என்கிறார்.
- புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் - தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.
- எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் வம்சமணி தீபிகை என்னும் நூலை 1879-இல் வெளியிட்டார். அப்பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசைகொண்ட பாரதி ஆட்சிசெய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு 06.8.1919-இல் கடிதம் எழுதினார்.
- வம்சமணி தீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக இளசை மணி என்பவரால் 2008-ல் அப்படியே வெளியிடப்பட்டது.
- பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர்.
- பாரதி நடத்திய சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர்.
- நெல்லைத்தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களையும் வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.
- மகாகவி பாரதி செல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதம் ரா.அ.பத்மநாபன் பதிப்பித்த 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கிறது.
- பாரதி பதினைந்து வயதில் கல்விகற்க உதவிவேண்டி எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதம் முதல் அவர்தம் மறைவிற்கு முன்னர் குத்திகேசவருக்கு எழுதிய கடிதம் வரை அனைத்தும் நம்மிடம் பேசுவதுபோல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு.
- பாரதியாரைவிட ஏழாண்டுகள் இளையவரான பரலி சு.நெல்லையப்பரைப் பாரதி தன்னுடைய அருமைத் தம்பியாகவே கருதி அன்புகாட்டி வந்தார்.
- பாரதியின் கடிதங்கள் மேலும் அவரை நன்றாகப் புரிந்துகொள்ளத் துணைபுரிகின்றன.
  பழையன கழிதலும் புதியன புகுதலும்
  வழுவல கால வகையி னானே. (நன்னூல்)
- 'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி' என்று துவங்கினார் ஆறுமுக நாவலர்.
- 'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர்க் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்ட போது' - ஆறுமுக நாவலர்.

**ஆறுமுக நாவலர் 1822-1879**

- வசனநடை கைவந்த வள்ளலார்' எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர்.
- தமிழ்நூல் பதிப்பு உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமை பெற்றவர்.
- திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் - சங்கர நமச்சிவாயர் விருத்திரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார்.
- இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன.
- புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார்.
- தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார்.

- திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது.
- பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.
- மொழியை வளர்ப்பவரும் மக்களே: மொழியால் வளர்பவரும் மக்களே. – மொழி வரலாறு (மு.வரதராசனார்)
- இலக்கண உலகில் புதிய பார்வை – டாக்டர் பொற்கொ
- தமிழ் அழகியல் - தி.சு.நடராசன்
- பாரதி கட்டுரைகள்
- காட்டுவாத்து - ந.பிச்சமூர்த்தி
- நெல்லூர் அரிசி - அகிலன்
- சுவரொட்டிகள் - ந.முத்துசாமி

## இனிக்கும் இலக்கணம்

### இயல் - 1

## தமிழாய் எழுதுவோம்

எழுதும்போது ஏற்படும் பிழைகளைக் கீழ்க்காணும் வகைப்பாட்டில் பிரிக்கலாம்.

- எழுத்துப் பிழை
- சொற்பொருட்பிழை
- சொற்றொடர்ப்பிழை
- பொதுவான பிழைகள் சில

**அடிப்படைக் செய்திகள்**

(அ) உயிரெழுத்துகள் 12. குறில்(5), நெடில்(7) என்று இரண்டு வகைப்படும்.

(ஆ) மெய்யெழுத்துக்கள் 18. மூன்று வகைப்படும்.

வல்லின மெய்கள் - க், ச், ட், த், ப், ற்.

மெல்லின மெய்கள் - ங், ஞ், ண், ந், ம், ன்.

இடையின மெய்கள் - ய், ர், ல், வ், ழ், ள்.

(இ) உயிர்மெய் எழுத்துகள் 216. (உயிர்மெய்க் குறில் 90, உயிர்மெய் நெடில் 126)

- எழுத்துகளின் ஒலிப்புமுறை, அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு, அவை சொல்லில் வரும் இடங்களையும் (முதல், இடை, கடை) தெள்ளத் தெளிவாய் மனத்துள் பதித்துக்கொள்வதைக் கடமையாகக் கொள்ளவேண்டும்.
- ந, ண, ன / ற, ர / ல, ள, ழ இவற்றின் வேறுபாடு அறிந்து வாய்விட்டு ஒலித்துப் பழகுவது சாலச் சிறந்தது.
- இவ்வெழுத்துகளுக்கான சில அடிப்படை இலக்கணத்தையும் கசடறக் கற்றல் இன்றியமையாத கற்றல் பணியாகும்.
- மேலுள்ள எட்டு எழுத்துகளில் **நகரம்** மட்டுமே சொல்லின் **தொடக்கமாக வரும். றகர** மெய் சொல்லின் **இறுதியில் வராது**. மற்றவை சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும்.

| ந, ண, ன, ற, ர, ல, ள, ழ | | |
|---|---|---|
| **முதல்** | **இடை** | **கடை** |
| நண்டு, நாடகம் | கண்டு, கன்று, கற்று, பார்த்து, கால்கள், பந்து, கொள்வது, புகழ்வது | கண், அவன், பார், கால், கொள், புகழ் |

- தமிழில் சொல்லின் தொடக்கமாக மெய்யெழுத்துகள் வருவதில்லை. வரின் தமிழில்லை. க்ரீடம், ப்ரியா - வடமொழி; க்ளிஷே - ஆங்கிலம்.
- வல்லின மெய்யோடு சொல் முடியாது. அப்படி முடிந்தால் தமிழ்ச் சொல்லன்று என்றுணர்க. பார்க் (Park), பன்ச் (Punch), பட் (But), போத் (Both), டப் (Tub) போன்றவை தமிழில்லை.
- வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா. ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை. காட்ச்சி, முயற்ச்சி என்றெழுதுவது பிழை.
- க், ச், த், ப் ஆகியவற்றின் பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும். பிற மெய்கள் வாரா. காக்கை, பச்சை, பத்து, உப்பு.
- ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் க, ச, ப என்னும் வரிசைகளுமே வரும். பாட்டு, வெட்கம், காட்சி, திட்பம், காற்று, கற்க, கற்சிலை, கற்பவை.
- ட, ற என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா. டமாரம், றப்பர் - தமிழ் இல்லை.
- ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும். தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும் (அஃது, எஃகு, கஃசு).
- மெல்லின எழுத்துகளில் ண, ன சொல்லின் தொடக்கமாக வாரா.
- தனிச்சொல்லின் இடையில் வல்லினத்துக்குமுன் அவ்வல்லின மெய்யோ அவற்றின் இன மெல்லினமெய்யோ வரும். பிற மெய்கள் வருவதில்லை (தக்கை, தங்கை, பச்சை, இஞ்சி, பண்டு, பட்டம், பத்து, பந்து, தப்பு, பாம்பு, கற்று, கன்று).
- ய், ர், ல், ழ், ள் என்னும் எழுத்துகளுக்குப்பின் வியங்கோள் வினைமுற்று / கள் விகுதி / வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும் (தேய்க, நாய்கள், தாய்சேய், ஊர்க, ஊர்கள், ஊர்சூழ், செல்க, கால்கள், செல்கணம், வாழ்க, வாழ்தல், தோள்கள்).
- ணகர ஒற்றினை அடுத்து றகரமும் னகர ஒற்றினை அடுத்து டகரமும் வருவதில்லை. (கண்டு என்று வரும், கன்டு என்று வருவதில்லை. மன்றம் என்று வரும் மண்றம் என்று வருவதில்லை).
- ஞ், ந், வ் என்னும் எழுத்துகளில் முடியக்கூடிய சொற்கள் அரிதாக உள்ளன (உரிஞ், வெரிந், பொருந், தெவ்).
- ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். மற்றவை அளபெடுத்தால் மட்டுமே வரும் (பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை).
- தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வாரா.
- தனிக்குறிலையடுத்து ரகர ஒற்று வரின் அதனைத் தமிழ் இயல்புக்கேற்பத் திருத்தி எழுதவேண்டும். (நிர்வாகம் - நிருவாகம்; கர்மம் - கருமம், கன்மம்)
- ரகரத்தை அடுத்து ரகர வரிசை எழுத்துகளும், ழகரத்தை அடுத்து ழகர வரிசை எழுத்துகளும் வாரா.
- உயிர் வரின் ஒரு, இரு முறையே ஓர், ஈர் என்று மாறும்.
- உயிர் வரின் அது, இது, எது முறையே அஃது, இஃகு, எஃகு என்பதாக மாறும்.

**லகர ளகர விதிகள் சில**

- வேற்றுமைப்புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் றகரமாய்த் திரிவதுண்டு. கல் + சிலை = கற்சிலை, கடல் + கரை = கடற்கரை.
- லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரிவதுண்டு. பல் + முகம் = பன்முகம்.
- ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு. மக்கள் + பேறு = மக்கட்பேறு.
- ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு. நாள் + மீன் = நாண்மீன்.
- வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரமும் றகரமாக மாறும். சொல் + துணை = சொற்றுணை.

- ❖ வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரமும் னகரமாக மாறும். பல் + நூல் = பன்னூல்.
- ❖ அல்வழியில், தனிக்குறிலடுத்த லகரம் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும். தகரமும் றகரமாகும். அல் + திணை = அஃறிணை; பல் + துளி = பஃறுளி.

இயக்குநர் என்பதே சரி. இயக்குனர் என்று எழுதுவது தவறு. இயக்கு, ஓட்டு, அனுப்பு, பெறு முதலான வினைகள் பெயரிடை நிலையான ந் என்பதைப் பெற்று (ந் + அர் = நர்). ஓட்டுநர், அனுப்புநர், பெறுநர் என்று பெயர்ச்சொற்களாகின்றன. உறுப்பினர், குழுவினர், ஊரினர் முதலானவை (உறுப்பு, குழு, ஊர்) பெயர்ச்சொற்கள். அதனால், அவை இன் என்னும் சாரியையைப் பெற்று முடிந்துள்ளன.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம் - ஆறுமுக நாவலர் (1822 - 1879)

- ‘வசனநடை கைவந்த வல்லளார் எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர்.
- தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார்.
- இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன.
- தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார்.
- திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு நாவலர் பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

**இலக்கிய நயம் பாராட்டுக**

முச்சங்கங் கூட்டி
        முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
        அளப்பரிய பொருள்கூட்டு
சொற்சங்க மாகச்
        சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
        அமைத்த பெருமாட்டி!

- கண்ணதாசன்.

**கலைச்சொற்கள்:**

- ✍ உறுப்பினர் கட்டணம் - Subscription
- ✍ புனைவு - Fiction
- ✍ வாழ்க்கை வரலாறு - Biography
- ✍ ஆவணம் - Archive
- ✍ கையெழுத்துப் பிரதி - Manuscript
- ✍ நூல் நிரல் - Bibliography

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

   அ) யாப்பெருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் **இ) தொல்காப்பியம்** ஈ) நன்னூல்

2. “மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்?

   1) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது 2) பொதிகையில் தோன்றியது

   3) வள்ளல்களைத் தந்தது

   அ) 1 மட்டும் சரி ஆ) 1, 2 சரி இ) 3 மட்டும் சரி **ஈ) 1, 3 சரி**

3. “மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது

   தன்னோர் இலாத தமிழ்!” - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

   அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

   **இ) அடிஎதுகை, சீர்மோனை** ஈ) சீர்எதுகை, அடிமோகை

4. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.

   கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி **இ) இரண்டு கருத்தும் சரி**

   ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

5. பொருத்துக.

   அ) தமிழ் அழகியல் - 1. பரலி சு. நெல்லையப்பர்

   ஆ) நிலவுப்பூ - 2. தி.சு. நடராசன்

   இ) கிடை - 3. சிற்பி பாலசுப்பிரமணியம்

   ஈ) உய்யும் வழி - 4. கி. ராஜநாராயணன்

   அ) 4 3 2 1 ஆ) 1 4 2 3 இ) 2 4 1 3 **ஈ) 2 3 4 1**

## மாதிரி வினாக்கள்

1. பொருத்துக.

   a. சென்னை இலக்கியச் சங்கம் - 1. 1860

   b. கன்னிமாரா நூலகம் - 2. 1812

   c. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் - 3. 1869

   d. அண்ணா நூற்றாண்டு நூலகம் - 4. 2010

   A) 1 2 3 4 B) 2 1 3 4 C) 3 1 2 4 D) 4 3 2 1 E) விடை தெரியவில்லை

2. தவறான இணையை தேர்வு செய்க.

   A) மார்கழி - ஓண விழா

   B) தை - தைப்பூச விழா

   C) மாசி - கடலாட்டு விழா

   D) பங்குனி - பங்குனி உத்திர விழா

   E) விடை தெரியவில்லை

3. கீழ்காணும் கூற்றுகளுக்கு பொருத்தமானவரைத் தேர்வு செய்க.

   1. ‘சாய்வு நாற்காலி’ என்னும் புதினத்திற்காக 1997-ல் சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.

   2. துறைமுகம், கூனன் தோப்பு ஆகிய படைப்புகளுக்கு தமிழக அரசின் விருது பெற்றவர்.

   A) சுரதா B) பூமணி C) தோப்பில் முகமது மீரான் D) தாராபாரதி E) விடை தெரியவில்லை

4. “என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது” என்று வ.உ.சி. பெருமிதத்துடன் யாரை அழைத்தார்.

   A) சோமசுந்தர பாரதியார் B) சுப்பிரமணிய சிவா C) கவிமணி D) கனக சுப்புரத்தினம்

   E) விடை தெரியவில்லை

5. தவறான இணை காண்க.

   A) வேட்டம் - மீன்பிடித்தல்

   B) செறு - வயல்

   C) கொள்கை - விரைவு

   D) விடர் - மலை வெடிப்பு

   E) விடை தெரியவில்லை

6. கூற்றுகளை ஆராய்க.

   கூற்று 1 : 1716 இல் உருவான ‘புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி’ ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளியாகும்.

   கூற்று 2 : 1914ல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட இராணி மேரி கல்லூரி பெண்கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனம் ஆகும்.

   A) கூற்று 1 தவறு, 2 சரி B) கூற்று 1, 2 சரி C) கூற்று 1 சரி, 2 தவறு

   D) கூற்று 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

7. ‘சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்’ என்று கூறியவர்

A) பாரதிதாசன் B) கவிமணி C) பாரதியார் D) திரு.வி.க E) விடை தெரியவில்லை

8. கூற்றுகளை ஆராய்ந்து விடையளிக்கவும்

கூற்று 1 : ‘ஜகன் மோகினி’ என்ற இதழை 35 ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார்.

கூற்று 2 : நாவல் ராணி, கதா மோகினி, ஏக அரசி என்று அழைக்கப்பட்டவர்

A) ருக்மணி லட்சுமிபதி B) வை.மு. கோதைநாயகி C) நீலாம்பிகை அம்மையார்

D) K.P. சுந்தராம்பாள் E) விடை தெரியவில்லை

9. தவறானதைத் தேர்வு செய்க.

A) காப்பியத்தமிழ் - இரா. காசிராசன்

B) ஒரு பார்வையில் சென்னை நகரம் - அசோகமித்திரன்

C) சென்னை பட்டணம் - தோப்பில் முகமது மீரான்

D) தசரதன் குறையும் கைகேயி நிறையும் - சோம சுந்தர பாரதியார்

E) விடை தெரியவில்லை

10. கூற்றுகளை ஆராய்க.

1. தொல்கப்பியரைத் தமிழ்ச் சான்றோர், “ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பின்” என போற்றுகின்றனர்.

2. தொல்காப்பிய நூல் முழுமைக்கும் இளம்பூரணர் உரை எழுதியுள்ளார்.

A) கூற்று 1, 2 சரி B) கூற்று 1 சரி, 2 தவறு C) கூற்று 1, 2 தவறு D) கூற்று 1 தவறு, 2 சரி

E) விடை தெரியவில்லை

11. பொருத்துக.

a. பாரதிதாசன் - 1. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

b. சுத்தானந்த பாரதியார் - 2. பாரதசக்தி மகா காவியம்

c. புலவர் குழந்தை - 3. இராவண காவியம்

d. கவிமணி - 4. மருமக்கள் வழி மான்மியம்

A) 2 1 3 4 B) 1 2 3 4 C) 1 3 2 4 D) 2 3 1 4 E) விடை தெரியவில்லை

12. தவறான இணையைக் காண்க.

A) பூதர் - ஐம்பூதங்கள்

B) ஓவிய விதானம் - ஓவியம் தீட்டப்பட்ட பந்தல்

C) விருந்து - புதுமை

D) நித்திலம் - பவனம்

E) விடை தெரியவில்லை

13. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு

அச்சாணி அன்னார் ............................

கடைசி சீரைக் காண்க.

A) பிற B) செயல் C) அறிவு D) உடைத்து E) விடை தெரியவில்லை

14. பொருத்துக.

அ) பாம்போடு உடன் உறைந்தற்று - 1. தீக்காய்வார்

ஆ) செத்தார் - 2. சீர் அழிக்கும் சூது

இ) வறுமை தருவது - 3. கள் உண்பவர்

ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4. உடன்பாடு இலாதவர்

A) 4 3 2 1 B) 1 2 3 4 C) 2 3 4 1 D) 4 1 3 2 E) விடை தெரியவில்லை

15. கீழ்க்காணும் கூற்றுகளுக்கு உரியவர் யார்?

1. வாய்க்கால் மீன்கள், உள்ளொளிப் பயணம், மூளைக்குள் சுற்றுலா ஆகிய நூல்களை இயற்றியவர்

2. “வாய்க்கால் மீன்கள்” என்னும் கவிதை நூல், 1995-ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றார்.

A) தமிழ்ஒளி B) கல்யாண்ஜி C) வாணிதாசன் D) வெ. இறையன்பு E) விடை தெரியவில்லை

16. “யானை புக படலம் போலத்

தானும் உண்ணான், உலகமும் கெடுமே” என்று கூறுகின்ற நூல்

A) புறநானூறு B) அகநானூறு C) குறுந்தொகை D) நற்றிணை E) விடை தெரியவில்லை

17. ஐராவதம் மகாதேவன் பெற்ற விருதையும் அதன் ஆண்டுகளையும் பொருத்துக.

அ) ஜவஹர்லால் நேரு ஆய்வறிஞர் விருது - 1970

ஆ) இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது - 2009

இ) தாமரைத்திரு விருது - 1992

A) 1 2 3 B) 1 3 2 C) 2 3 1 D) 3 2 1 E) விடை தெரியவில்லை

18. தவறான இணையைக் காண்க.

A) முள்ளும் மலரும் - உமா சந்திரன்

B) வெள்ளை இருட்டு - இன்குலாப்

C) கல்வெட்டுகள் சொல்லும் கோயில் கதைகள் - நடராசன்

D) முச்சந்தி இலக்கியம் - வெங்கடாசலபதி

E) விடை தெரியவில்லை

19. ந.மு. வேங்கடசாமி பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. ‘மொஹெஞ்சோதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் என்ற நூலை இயற்றியவர்.

2. 2006 - 2007 ஆம் ஆண்டு இவருடைய நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டது.

A) 1, 2 தவறு B) 1 சரி C) 2 சரி D) 1, 2 சரி E) விடை தெரியவில்லை

20. கூற்றுகளை ஆராய்க.

1. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தி அகநானூற்றில் இருப்பதை முதன் முதலில் அறிந்து வெளிப்படுத்தியவர் மயிலை சீனி. வேங்கடசாமி.

2. சீனி. வேங்கடசாமி 25 ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றியவர்.

A) 1 சரி B) 2 சரி C) 1, 2 சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

21. கிறித்துவக் கம்பர் என அழைக்கப்பட்டவர்?

A) எச். ஏ. கிருட்டிணனார் B) ஜி.யு. போப் C) கால்டுவெல் D) ஜான் பன்யன்

E) விடை தெரியவில்லை

22. "வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்" என்னும் வரி இடம்பெற்ற நூல்

A) அகநானூறு B) புறநானூறு C) சிறுபாணாற்றுப்படை D) பெரும்பாணாற்றுப்படை

E) விடை தெரியவில்லை

23. கூற்றுகளை ஆராய்க. (இதற்குப் பொருத்தமான நாடை தேர்வு செய்க.)

1. பொதிய மலை எனப்படும் மலை நாட்டுப் பகுதியாகும்.

2. தற்போது அகத்தியர் மலை என்றும் அழைக்கப்படுகிறது.

A) ஆய்நாடு B) காரியின் நாடு C) பாரியின் நாடு D) ஓரியின் நாடு E) விடை தெரியவில்லை

24. வ.சு.ப மாணிக்கத்தின் கூற்றுகளை ஆராய்க.

1. தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் 'தமிழ் இமயம்' என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டார்.

2. 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை தோற்றுவித்தார்.

A) 1, 2 தவறு B) 1, 2 சரி C) 1 சரி D) 2 சரி E) விடை தெரியவில்லை

25. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

A) ஆய் அண்டிரனும் அதியனும் B) நல்லியக் கோடனும் குமணனும் C) நள்ளியும் ஓரியும்

D) பாரியும் காரியும் E) விடை தெரியவில்லை

26. 1. ஒரு கிராமத்து நதி, சூரிய நிழல், ஒளிப்பறவை முதலிய பல கவிதை நூல்களை எழுதினார்.

2. இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களை எழுதியவர்.

3. சாகித்ய அகாடமியின் செயற்குழு உறுப்பினராக இருந்தவர்.

4. மொழிபெயர்ப்புக்காகவும் ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

இவ்வரிகளுடன் தொடர்புடையவர் யார்?

A) மாணிக்கவாசகர் B) சிற்பி பாலசுப்பிரமணியன் C) அலாவுதீன் ரூமி D) அய்யப்ப மாதவன்

E) விடை தெரியவில்லை

27. அணியிலக்கணத்தை கூறும் இலக்கண நூல்களில் பொருந்தாதது எது / எவை?

A) தொன்னூல் விளக்கம் B) இலக்கண விளக்கம் C) முத்துவீரியம் D) குவலயானந்தம்

E) விடை தெரியவில்லை

28. நீர்படு பசுங்கலம் என்ற வரிகளில் இடம்பெற்றுள்ள நூல்?

A) புறநானூறு B) நற்றிணை C) தொல்காப்பியம் D) கலித்தொகை E) விடை தெரியவில்லை

29. பொருத்துக.

அ) அஷராப்பியாசம் - 1. தாழை மடல்

ஆ) குழிமாற்று - 2. எழுத்துப்பயிற்சி

இ) சீதாள பத்திரம் - 3. கல்விப் பயிற்சி

ஈ) வித்தியாப்பியாசம் - 4. பெருக்கல் வாய்ப்பாடு

A) 1 2 4 3 B) 3 2 4 1 C) 2 4 1 3 D) 3 4 2 1 E) விடை தெரியவில்லை

30. கூற்றுகளை ஆராய்க.

1. மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் அஷராப்பியாசத்தை மையாடல் விழா என்று கூறுவர்.

2. இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருக்கிக் கட்டுவர். இதற்கு சட்டமென்று பெயர்.

3. சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்குத் தூக்கு என்று பெயர். இதனை அசை என்றும் சொல்வர்.

4. தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப்போல் எழுதிவரச் சொல்வார்கள். இதற்கு நாராசம் என்று பெயர்.

A) 1, 3 சரி 2, 4 தவறு B) 1, 4 சரி 2, 3 தவறு C) 2, 3 சரி 1, 4 தவறு

D) 1, 2, 3 சரி 4 தவறு E) விடை தெரியவில்லை

31. 1. மகாமகோபாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாஷிணாத்திய கலாநிதி உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றவர்.

2. 1932இல் சென்னைப் பல்கலைக் கழகத்தினால் டாக்டர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.

3. இவரது திருவுருவச்சிலை சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் நிறுவப்பட்டுள்ளது. சென்னை திருவான்மியூரில் இவர் பெயரில் ஒரு நூலகம் அமைந்துள்ளது.

4. பிள்ளைகளுக்கு மணல்தான் சிலேட்டின் நிலையிலிருந்தது. பனையேடுதான் புத்தகம், எழுத்தாணியே பேனா என்று கூறியவர்.

இவ்வரிகளுடன் தொடர்புடையவர் யார்?

A) இராசமாணிக்கனார் B) உ.வே.சா C) வ.சுப. மாணிக்கம் D) இராசகோபாலன்

E) விடை தெரியவில்லை

32. இவற்றில் பொருந்தாதது எது / எவை? (சுரதா)

A) உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படும் சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன்.

B) காவியம் என்ற இதழை நடத்தியதோடு இலக்கியம், விண்மீன், ஊர்வலம் போன்ற இலக்கிய ஏடுகளையும் நடத்தியுள்ளார்.

C) இவர் தமிழக அரசின் கலைமாணி விருது, பாரதிதாசன் விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இராசராசன் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.

D) இருத்தலின் வெறுமையைச் சிரிப்பும் கசப்புமாகச் சொன்னவர்.

E) விடை தெரியவில்லை

33. கூற்றை ஆராய்க.

கூற்று : அர்டிக் பகுதி கடந்த முப்பது ஆண்டுகளில் நான்கு இலட்சம் சதுரமைல்கள் உருகியுள்ளது. இதற்குப் புவி வெப்பமாதலே காரணமாகும்.

காரணம் : இங்கிலாந்தைச் சேர்ந்த டேவிட் கிங் புவிவெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

A) கூற்று சரி, காரணம் தவறு B) கூற்று சரி, காரணம் சரி C) கூற்று தவறு, காரணம் சரி

D) கூற்று தவறு, காரணம் தவறு E) விடை தெரியவில்லை

34. கூற்றை ஆராய்க.

கூற்று 1 : வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது காஞ்சித் திணை.

கூற்று 2 : போர்மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு கூதிர்பாசறை.

A) கூற்று சரி, காரணம் தவறு B) கூற்று சரி, காரணம் சரி C) கூற்று தவறு, காரணம் சரி

D) கூற்று தவறு, காரணம் தவறு E) விடை தெரியவில்லை

35. நெடுநல்வாடை பற்றிய கூற்றுகளில் சரியானது?

1. பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலவனாகக் கொண்டு மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றியுள்ளார்.

2. இது 188 அடிகளைக் கொண்டது.

3. இப்பாடலின் பெயர் மூன்று வகையில் பொருள் சிறந்து விளங்குகிறது.

4. தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பமிகுதியால் நெடுநல்வாடையாகவும் போர்ப் பாசறையிலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் இருப்பதால் நெடுநல்வாடை எனும் பெயர் பெற்றது.

A) 1, 2, 4 B) 1, 2, 3 C) 1, 3, 4 D) அனைத்தும் E) விடை தெரியவில்லை

36. சங்ககாலத்தில் திருமணத்திற்குப் பின் மனைவியுடன் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழும் நடைமுறை பற்றி கூறும் நூலின் பெயர்

A) புறநானூறு B) அகநானூறு C) கலித்தொகை D) பரிபாடல் E) விடை தெரியவில்லை

37. பொருத்துக.

அ) கடகம் - 1. புன்செய்

ஆ) திருகை - 2. ஓலைப் பெட்டி

இ) கொராமுனுசு - 3. மாவு அரைக்கும் கல்

ஈ) புஞ்சை - 4. கிராம நிர்வாக அலுவலர்

A) 1 2 3 4 B) 4 3 2 1 C) 2 3 4 1 D) 1 4 2 3 E) விடை தெரியவில்லை

38. பொருந்தாத இணையைக் காண்க.

A) உவா - அமாவாசை

B) செற்றார் - உறவினர்

C) இளவல் - தம்பி

D) உடுபதி - சந்திரன்

E) விடை தெரியவில்லை

39. மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு

மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே ! கூவி வா வா !

A) நன்னூல் B) ஆறுமுகநாவலர் C) நெல்லையப்பர் D) சிற்பி பாலசுப்பிரமணியம்

E) விடை தெரியவில்லை

40. கூற்றை ஆராய்க.

கூற்று : திருமணம், குடும்பம் ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இடம்பெறுகின்றன.

காரணம் : குடும்பம் எனும் சொல் முதன் முதலில் தொல்காப்பியத்தில் இடம் பெறுகின்றன.

A) கூற்று சரி, காரணம் தவறு B) கூற்று சரி, காரணம் சரி C) கூற்று தவறு, காரணம் சரி

D) கூற்று தவறு, காரணம் தவறு E) விடை தெரியவில்லை

41. பொருத்துக.

அ) தமிழ் அழகியல் - 1. பரலிசு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ - 2. தி.சு. நடராசன்

இ) உய்யும் வழி - 3. சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) கிடை - 4. கி. ராஜநாராயணன்

A) 4 3 2 1 B) 2 3 1 4 C) 1 4 2 3 D) 2 4 1 3 E) விடை தெரியவில்லை

42. முச்சங்கங் கூட்டி

முதுபுலவர் தமைக் கூட்டி என்ற வரிகளுடன் தொடர்புடையவர் யார்?

A) கவிமணி B) ஜெயகாந்தன் C) அகிலன் D) கண்ணதாசன் E) விடை தெரியவில்லை

43. பொருந்தாததைத் தேர்வு செய்க.

A) இதுவரை - சி. மணி

B) வயிறுகள் - பூமணி

C) சிறை - வ.சுப. மாணிக்கம்

D) புளிய மரத்தின் கதை - சுந்தரராமசாமி

E) விடை தெரியவில்லை

44. அ.்.காமை செல்வத்திற்கு யாதெனின் வெ.்.காமை

.................................................... - இக்குறளில் பயின்று வந்துள்ள பொருள் யாது?

A) பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருத்தல்

B) பிறர் பொருளை விரும்புதலைச் செய்யமாட்டார்

C) இயல்பாக உள்ள அறிவு மேலோங்கித் தோன்றும்

D) யாரிடத்தில் சினம் கொள்ளாமல் மறந்துவிட வேண்டும்

E) விடை தெரியவில்லை

45. வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே என்று புகழ்ந்து பாடியவர்?

A) பாரதியார் B) பாரதிதாசன் C) கவிமணி D) நாமக்கல்கவிஞர் E) விடை தெரியவில்லை

46. தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர் யார்?

A) மாயூரம் வேதநாயகம் B) வேதநாயகம் பிள்ளை C) பரிதிமாற் கலைஞர்

D) மனோன்மணியம் சுந்தரனார் E) விடை தெரியவில்லை

47. 1. ஞானசாகரம் முதலான இதழ்களை நடத்தினார்.

2. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சாகுந்தல நாடகம், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதலான பலநூல்களை எழுதியுள்ளார்.

3. எளிய தமிழ்ச் சொற்களைக் கொண்டே பேசவும் எழுதவும் இயலும் என்று நடைமுறைப்படுத்தினார்.

A) ஆறுமுகநாவலர் B) மறைமலைஅடிகள் C) பரிதிமாற் கலைஞர் D) இளங்கோ கிருஷ்ணன்

E) விடை தெரியவில்லை

48. “காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை” இத்தொடரில் ‘கலன்’ உணர்த்தும் பொருள்?

A) போர்க்கருவி B) வேளாண்கருவி C) இசைக்கருவி D) தச்சுக்கருவி E) விடை தெரியவில்லை

49. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

A) கடுக்காய் B) மணத்தக்காளியிலைச் சாறு C) மாவலைக் கரி D) வசம்பு

E) விடை தெரியவில்லை

50. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது?

A) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது B) பசுமைக் குடில் வாயுக்கள் அதிகமாகிறது.

C) காலநிலை மாறுபடுகிறது D) புவியின் இயக்கம் வேறுபடுகிறது E) விடை தெரியவில்லை

# ANSWER KEY

| S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 11 | B | 21 | A | 31 | B | 41 | B |
| 2 | A | 12 | D | 22 | C | 32 | D | 42 | D |
| 3 | C | 13 | D | 23 | A | 33 | B | 43 | C |
| 4 | A | 14 | A | 24 | B | 34 | C | 44 | A |
| 5 | C | 15 | D | 25 | B | 35 | A | 45 | B |
| 6 | A | 16 | A | 26 | B | 36 | B | 46 | A |
| 7 | C | 17 | B | 27 | D | 37 | C | 47 | B |
| 8 | B | 18 | C | 28 | B | 38 | B | 48 | C |
| 9 | C | 19 | D | 29 | C | 39 | D | 49 | B |
| 10 | A | 20 | C | 30 | A | 40 | D | 50 | A |

திண்ணை பயிற்சிப் பட்டறை தேனி 99409 70325